**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்.**
**முன்னிலை :– திரு.S.அன்புதாசன், பி,காம்., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்.**
**2026ம் ஆண்டு ஜீன் திங்கள் 09–ம் நாள் செவ்வாய்கிழமை**

**IA.No.1/2026 in OS.No.19/2025**

பிரேம்குமார் .... மனுதார்/3ம் பிரதிவாதி

/எதிர்/

சிவசுப்பிரமணியன் .... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்னர் இன்று(09.06.2026) இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதார்/3ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.பால்கண்ணன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் மனு நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்படலாம் என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ள நிலையில், இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இம்மன்றத்தால் பிறப்பிக்கப்படும்:

**உ த் த ர வு**

அசல் வழக்கில் கடந்த 07.11.2025–ம் தேதியில் மனுதார்/3ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்தும், இத்துடன் மனுதாரரது தரப்பில் சமர்ப்பிக்கப்படும் எதிர்வழக்குரையை (Written

Statement) கோப்பிற்கு எடுத்துக்கொண்டு உத்தரவு பிறப்பிக்க கோரி உவிமுச கட்டளை 9 விதி 7–ன்கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதார்/3ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் பின்வருமாறு</u> :–**

மனுதார்/3ம் பிரதிவாதிக்கு எதிராக எதிர்மனுதாரர்/வாதி நிரந்தர தடைஉத்தரவு பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி அசல் வழக்கில் மனுதாரரது தரப்பில் எதிர்வழக்குரையை(Written Statement) தாக்கல் செய்ய வேண்டிக் கடந்த 07.11.2025–ம் தேதியன்று வாய்தா ஏற்பட்டிருந்தது. அன்றைய தினம் மனுதாரருக்கு திடீரென்று ஏற்பட்ட உடல் நலக்குறைவின் காரணமாக மனுதாரர் மருத்துவமனைக்குச் சென்றுவிட்டதால், மனுதாரரால் வாய்தாவிற்கு செல்ல இயலாத காரணத்தினால் மனுதாரர் மீது ஒருதலைபட்ச உத்தரவு பிறப்புவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தவறு வேண்டுமேன்றே ஏற்பட்டதல்ல. எனவே, அசல் வழக்கில் கடந்த 07.11.2025–ம் தேதியில் மனுதார்/3ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்தும், இத்துடன் மனுதாரரது தரப்பில் சமர்ப்பிக்கப்படும் எதிர்வழக்குரையை (Written Statement) கோப்பிற்கு எடுத்துக்கொண்டு உத்தரவு பிறப்பிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் மனு நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்படலாம் என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

5) **<u>பிரச்சனைக்குரிய தீர்வு</u>**

மனுதாரரின் மனு மற்றும் வழக்குக் கோப்பினைப் பரிசீலனை செய்ததில், அசல் வழக்கானது நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மனுதாரருக்கு திடீரென்று ஏற்பட்ட உடல்நலக்குறைவின் காரணத்தினால் 07.11.2025ம் தேதியில் மனுதாரர்/3ம் பிரதிவாதி ஆஜராகாத காரணத்தினால் தாவா வழக்கு ஒருதலைபட்சப்படுத்தப்பட்டு உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் மனு நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்படலாம் என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்/3ம்பிரதிவாதி எதிர்வழக்குரையை தாக்கல் செய்துவிட்டதாலும், இவ்வழக்கின் இறுதியான தீர்வுக்கு தரப்பினருக்கு போதிய வாய்ப்பளிக்க வேண்டும் என்பதை கருத்திற்க்கொண்டு, மனுதாரர்/3ம் பிரதிவாதிக்கு எதிராக கடந்த 07.11.2025 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மேற்படியாரின் மனுவை அனுமதிப்பது தான் நீதியின் பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து, இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவில்,** இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம்

மேற்கொள்ளப்பட்டு, கையொப்பமிடப்பட்டு, 2026-ம் நாளன்று ஜீன் திங்கள் 09-ம் நாளாகிய இன்று திறந்த அவையில் அவையறியப் பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN

Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.07.24 15:25:19 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்
ஆத்தூர்

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் இல்லை**

SUBRAMANIYAN ANBUTHASAN

Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.07.24 15:25:23 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்
ஆத்தூர்